# முது மொழிக் கலசம்

(வாழ்வை நெறிப்படுத்தும் கருத்துக்களின் தொகுப்பு)



அமரர்

## திரு கந்தையா கனகரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஞாபகார்த்த வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முதுமொழிக் கலசம்

( வாழ்வை நெறிப்படுத்தும் கருத்துக்களின் தொகுப்பு )



K.Murugathasan
(Retired Teacher)
B.A.(Hons) Tamil
P.G.D.E.
M.Phil.Tamil

அமரர்

## திரு. கந்தையா கனகரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## ஞாபகார்த்த வெளியீடு

**23-04-2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கணபதியின்
அன்புடைய பக்தனாகி
அனுதினமும் அவன் புகழே
ஓதி, ஓதி
தொண்ணூறு ஆண்டுகளைத் தாண்டி – நல்ல
மனிதனாக இவ்வுலகில்
மகிழ்ந்திருந்து – இன்று
பிள்ளைகளும் உறவுகளும்
ஏங்கி நிற்க
இறைவனடி சேர்ந்த
எங்கள் தந்தையார்க்கு
இந்நூல் சமர்ப்பணம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் துதி

*திருச்சிற்றம்பலம்*

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருவு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாறிநின்றென் னைமயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
யுள்ளவாகாண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே யென்னுடையன்பே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கல்லாலின் படையமர்ந்து நான்மறையா
றங்குமுதற் கற்ற வேள்வி
வல்லார்கணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
இருந்த படி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்லாம்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மகாகவி பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை

கற்ப விநயாகக் கடவுளே போற்றி
சிற்பர மோனத் தேவன் வாழ்க
வாரண முகத்தான் மலர்த்தாள் வாழ்க
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க
படைப்புக் கிறையவன் பண்ணவர் நாயகன்
இந்திர குரு எனதிதயத்து ஒளிர்வான்
சந்திர மௌலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்
குணமதிற் பலவாம் கூறக் கேளீர்
உட்செவி திறக்கும் அகக்கண் ஒளிதரும்
அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்
திக்கெல்லாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்
கட்செவி (பாம்பு) தன்னைக் கையிலே எடுக்கலாம்
விடத்தையும் நோவையம் வெம்பகை தன்னையும்
துச்சமென்றெண்ணித் துயரிலாதிங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலை பெற்றோங்கலாம்
அச்சம் தீரும் அமுதம் விளையும்
வித்தை வளரும் வேள்வி ஓங்கும்
அமரத் தன்மையும் எய்தவும்
இங்கு நாம் பெறலாம்.
எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனதிற் சலனமில்லாமல்
மதியில் இருள் தோன்றாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கும் பொழுது நின் மவுன
நிலை வந்திட நீ செயல் வேண்டும்
கனக்கும் செல்வம் நூறு வயது
இவையும் தர நீ கடவாய்

கடமையாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்
நாராயணனாய் நதிச்சடை முடியனாய்
பிற நாட்டிருப்போர் பெயர் பல கூறி
அல்லா யெஹோவா எனத் தொழுது இன்புறும்

தேவருந்தானாய் திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்த வான் பொருளாய்
இந்நான்கே இப் பூமியில் எவர்க்கும்
கடமை எனப்படும் பயன் இதில் நான்காம்
அறம், பொருள் இன்பம் வீடெனும் முறையே
தன்னை ஆளும் சமர்த்து எனக்கு அருள்வாய்
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்
அசையா நெஞ்சம் அருள்வாய் உயிரெலாம்
இன்புற்றிருக்க வேண்டி நின் இருதாள்
பணிவதே தொழில் எனக் கொண்டு
கணபதி தேவா வாழ்வேன் களித்தே
பேசாப் பொருளைப் பேசத் துணிந்தேன்
கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்
மண் மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் வேண்டும் தேவ தேவா
ஞான ஆகாசத்து நடுவே நின்று நான்
பூ மண்டலத்தில் அன்பும் பெறையும்
விளங்கும் துன்பமும் மிடிமையம் நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்த பல் உயிரெலாம்
இன்புற்று வாழ்க என்பேன் இதனை நீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
அங்ஙனே ஆகுக என்பாய் ஐயனே
இந்நாள் இப்பொழுது எனக்கு இவ்வரத்தினை
அருள்வாய் ஆதிமூலமே அநந்த
சக்தி குமாரனே சந்திர மௌலீ
நித்தியப் பொருளே சரணம்
சரணம், சரணம், சரணமிங்குலக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தி சூடி

1. **அறம்செய விரும்பு**

   நற்கருமங்களைச் செய்வதற்கு ஆசை கொள்ள வேண்டும்.

2. **ஆறுவது சினம்**

   தணிய வேண்டுவது கோபமேயாகும்.

3. **இயல்வது கரவேல்**

   நம்மால் முடிந்ததை ஒளியாமல் செய்ய வேண்டும்.

4. **ஈவது விலக்கேல்**

   பிறருக்குக் கொடுப்பதைத் தடுத்தல் ஆகாது.

5. **உடையது விளம்பேல்**

   நம் திறமைகளை வெளியே சொல்லக்கூடாது.

6. **ஊக்கமது கைவிடேல்**

   ஒரு காரியம் செய்யும்போது தடை ஏற்படுமானால் அது கண்டு உற்சாகம் குன்றிவிடல் ஆகாது.

7. **எண் எழுத்து இகழேல்**

   கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்குதல் ஆகாது.

8. **ஏற்பதிகழ்ச்சி**

   பிறரிடம் யாசிப்பது இழிவு தருவதாகும்.

9. **ஐயம் இட்டு உண்**

   பிச்சையிட்டுப் பின்னர் உண்ணுதல் வேண்டும்.

10. **ஒப்புரவு ஒழுகு**

    உலகத்தின் போக்கு எப்படி என்று அறிந்து; அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

11. **ஓதுவது ஒழியேல்**

    எக்காரணத்தை முன்னிட்டும் படிப்பதைவிட்டு விடலாகாது.

12. **ஔவியம் பேசேல்**

    பொறாமை வார்த்தைகளைப் பேசுவது கூடாது.

13. **அஃகஞ் சுருக்கேல்**

    அளவைக் குறைத்துத் தானிய வியாபாரம் செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. கண்டு ஒன்று சொல்லேல்**

கண்ணால் கண்டதற்கு மாறாக எதுவும் கூறாதே. கண்டபடியே சொல்வாயாக.

**15. 'ங'ப்போல் வளை**

'ங' எனும் எழுத்தைப் போன்று அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டும்.

**16. சனி நீராடு**

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து தலை முழுக வேண்டும்.

**17. ஞயம்பட உரை**

கேட்பவர்களுக்கு இன்பம் உண்டாகும் விதமாகப் பேசு, அதாவது இனிமையாகப் பேச வேண்டும்.

**18. இடம்பட வீடு எடேல்**

அளவுக்கு மேல் இடம் வீணில் கிடக்க வீடு கட்டுதல் கூடாது.

**19. இணக்கம் அறிந்து இணங்கு**

ஒருவர் நல்ல குணமுடையவர் தானா என்பதை அறிந்து அதன் பின் அவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

**20. தந்தைதாய் பேண்**

தாய் தந்தையரை அன்புடன் ஆதரித்து பாதுகாக்க வேண்டும்.

**21. நன்றி மறவேல்**

ஒருவர் செய்த நன்மையை ஒருபோதும் மறந்துவிடலாகாது.

**22. பருவத்தே பயிர்செய்**

உரிய காலம் அறிந்து பயிர் செய்ய வேண்டும்.

**23. மண் பறித்து உண்ணேல்**

பிறர் நிலத்தை அபகரித்து சீவனம் பண்ணாதே.

**24. இயல்பலாதன செயேல்**

தருமத்துக்கு மாறுபட்ட காரியங்களை நீ செய்தல் கூடாது.

**25. அரவம் ஆட்டேல்**

பாம்புடன் விளையாடுதல் கூடாது.

**26. இலவம் பஞ்சில் துயில்**

இலவம் பஞ்சினால் செய்த மெத்தையிலே நீ நித்திரை கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. **வஞ்சகம் பேசேல்**

கபடமாக வார்த்தை பேசுதலாகாது.

28. **அழகு அலாதன செய்யேல்**

துன்பம் வந்த காலத்தும் இழி செயல் புரிதல் கூடாது.

29. **இளமையிற் கல்**

இளமையிலேயே நீ கற்றுக்கொள்ள படிக்க வேண்டும்.

30. **அரனை மறவேல்**

கடவுளை மறக்கக் கூடாது.

31. **அனந்தல் ஆடேல்**

கடலில் நீந்தி விளையாடக் கூடாது.

32. **கழிவது மற**

கோபம் உண்டாக்கும் வார்த்தைகளை மறந்துவிடவேண்டும்.

33. **காப்பது விரதம்**

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் காப்பதே நோன்பு

34. **கிழமைப்பட வாழ்**

உடலும் பொருளும் பிறர்க்கே உரிமைப்படும்படி வாழ வேண்டும்.

35. **கீழ்மை அகற்று**

இழிவான செயல்களை நீக்க வேண்டும்.

36. **குணமது கைவிடேல்**

நல்ல குணங்களை விட்டுவிடலாகாது.

37. **கூடிப்பிரியேல்**

நல்லவருடன் சினேகம் செய்து, பிறகு அவரை விட்டு நீங்குதல் கூடாது.

38. **கெடுப்பது ஒழி**

பிறருக்கு கெடுதல் செய்வதை விட்டுவிட வேண்டும்.

39. **கேள்வி முயல்**

கற்றவர் கூறுவனவற்றைக் கேட்பதற்கு நீ முயற்சி செய்.

40. **கைவினை கரவேல்**

உனக்குத் தெரிந்த கைத்தொழிலைப் பிறருக்கு ஒழிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. **கொள்ளை விரும்பேல்**

பிறர் பொருளைக் கொள்ளையிட ஒருபோதும் விரும்புதலாகாது.

42. **கோதாட்டு ஒழி**

குற்றமுள்ள விளையாடல்களில் ஈடுபடலாகாது.

43. **சக்கர நெறி நில்**

அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நடக்க வேண்டும்.

44. **சான்றோர் இனத்து இரு**

அறிஞர்கள் நிறைந்த கூட்டத்தில் கலந்து கொள்ளுவாயாக.

45. **சித்திரம் பேசேல்**

பொய்யை மெய் போல் சித்தரித்துப் பேசுதலாகாது.

46. **சீர்மை மறவேல்**

புகழுக்குக் காரணமானவைகளை மறந்து நடத்தலாகாது.

47. **சுளிக்கச் சொல்லேல்**

கேட்பவர் முகம் சுளிக்கும்படி நீ பேசுதல் கூடாது.

48. **சூது விரும்பேல்**

சூதாடுதலை ஒருபோதும் நீ விரும்பலாகாது.

49. **செய்வன திருந்தச்செய்**

செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்ய வேண்டும்.

50. **சேரிடம் அறிந்து சேர்**

நன்மையடையத் தகும் இடத்தைத் தெரிந்து அங்கு சேர்.

51. **சையெனத் திரியேல்**

பலரும் சீ என்று வெறுக்கும்படி துட்டனாய்த் திரியலாகாது.

52. **சொல் சோர்வு படேல்**

மற்றவருடன் பேசும்போது உற்சாகம் குன்றிச் சோர்வுடன் பேசுதலாகாது.

53. **சோம்பித் திரியேல்**

முயற்சி செய்யாது சோம்பல் கொண்டு வீணாக திரியாதே.

54. **தக்கோன் எனத் திரி**

தகுதியுடைவன் என்று எல்லோரும் புகழும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55. தானமது விரும்பு**

தானம் செய்ய விருப்பம் கொள்ள வேண்டும்.

**56. திருமாலுக்கு அடிமைசெய்**

திருமாலுக்குத் தொண்டு செய்வாயாக.

**57. தீவினை அகற்று**

பாவச் செயல்களை நீக்கிவிடல் நன்று.

**58. துன்பத்திற்கு இடம் கொடேல்**

முயற்சியினால், வரும் துன்பத்துக்கு இடம் கொடுக்காது மீண்டும் முயல்வாயாக.

**59. தூக்கி வினை செய்**

நன்றாக யோசித்து அதன் பிறகே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்.

**60. தெய்வம் இகழேல்**

கடவுளை இகழக் கூடாது.

**61. தேசத்தோடு ஒத்து வாழ்**

தேசத்து மக்களுடன் ஒத்து வாழ வேண்டும்.

**62. தையல் சொல் கேளேல்**

மனைவியின் இழிந்த சொற் கேட்டு நடக்காதே.

**63. தொன்மை மறவேல்**

பழமையை மறந்துவிடலாகாது.

**64. தோற்பன தொடரேல்**

தோல்வி தரும் செயல்களில் மீண்டும் ஈடுபடலாகாது.

**65. நன்மை கடைப்பிடி**

நல்ல காரியம் செய்தலையே, உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

**66. நாடு ஒப்பன செய்**

நாட்டில் உள்ளோர் ஒத்துக்கொள்ளக்கூடியவற்றையே செய்தல் வேண்டும்.

**67. நிலையிற் பிரியேல்**

இருக்கும் உயர் நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்கி விடலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**68. நீர் விளையாடேல்**

வெள்ளத்தில் நீந்தி விளையாடல் கூடாது.

**69. நுண்மை நுகரேல்**

நோய் தரும் உணவுகளை உட்கொள்ளக் கூடாது.

**70. நூல் பல கல்**

அறிவை வளர்க்கும் நூல் பலவற்றையும் விடாது கற்பாயாக.

**71. நெற்பயிர் விளை**

நெற்பயிர் விளைவு செய்

**72. நேர்பட ஒழுகு**

நேர்மையாக நடந்து கொள்

**73. நைவினை நணுகேல்**

ஒருவரைக் கெடுக்கும் செயல்கள் பக்கம் ஒரு போதும் செல்லாதே.

**74. நொய்ய உரையேல்**

பயனற்ற வார்த்தைகளைப் பேசுதலாகாது.

**75. நோய்க்கு இடம் கொடேல்**

வியாதி உண்டாக இடம் கொடுக்கக்கூடாது.

**76. பழிப்பன பகரேல்**

பிறர் பழிக்கும் இழி சொற்களைக் கூறுதலாகாது.

**77. பாம்பொடு பழகேல்**

பாம்புடனே பழகுதல் கூடாது.

**78. பிழைபடச் சொல்லேல்**

குற்றம் தோன்றப் பேசுதல் கூடாது.

**79. பீடு பெற நில்**

பெருமை பெறத்தக்க வழியிலே நிற்க வேண்டும்.

**80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்**

உலகம் புகழும் பெரியவர்களைப் போற்றி அதன்படி வாழ்.

**81. பூமி திருத்தி உண்**

பூமியைச் சீர்திருத்திப் பயிர் செய்து உண்ண வேண்டும்.

**82. பெரியாரைத் துணைக்கொள்**

பெரியவர்களை உனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. **பேதைமை அகற்று**
அறியாமையைப் போக்க வேண்டும்.

84. **பையலோடு இணங்கேல்**
அறிவிலிகளான சிறுவர்களுடன் சேரலாகாது.

85. **பொருள் தனைப் போற்றி வாழ்**
பொருளை வீண் செலவு செய்யாமல் பாதுகாத்து வாழவேண்டும்.

86. **போர்த்தொழில் புரியேல்**
வீணான சண்டை சச்சரவுகள் செய்யாதே.

87. **மனந்தடு மாறேல்**
எது கண்டும் மனம் தடுமாறல் கூடாது.

88. **மாற்றானுக்கு இடம் கொடேல்**
பகைவனுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

89. **மிகைபடச் சொல்லேல்**
அளவுக்கு மீறி எதையும் கூறுதல் ஆகாது.

90. **மீதூண் விரும்பேல்**
அதிகமாக உண்ண ஆசைப்படாதே.

91. **முனைமுகத்து நில்லேல்**
போர் முனையிலே ஆயுதம் இன்றி நில்லாதே.

92. **மூர்க்கரோடு இணங்கேல்**
மூர்க்கர்களுடன் சிநேகிதம் கொள்ளாதே.

93. **மெல்லி நல்லாள் தோள் சேர்**
மனைவியுடன் இன்பமாக சேர்ந்து வாழவேண்டும்.

94. **மேன்மக்கள் சொற்கேள்**
நல்லொழுக்கமுடைய பெரியார்கள் புத்திமதிகளைக் கேட்க வேண்டும்.

95. **மைவிழியார் மனையகல்**
விலைமாதர் வீட்டுவழி ஒரு போதும் போகாதே.

96. **மொழிவது அறமொழி**
சொல்வதை ஐயம் திரிபுஅற சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97. மோகத்தை முனி**

ஆசையை கோபித்து விரட்டி விடவேண்டும்.

**98. வல்லமை பேசேல்**

சுயசாமர்த்தியத்தைப் பெரிதாகப் பேசுதலாகாது.

**99. வாதுமுன் கூறேல்**

வீண் வாதங்களுக்கு முற்பட்டு பிறரை அழைத்தலாகாது.

**100. வித்தை விரும்பு**

கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும்.

**101. வீடு பெறநில்**

முத்தி பெறும் வழியிலே ஒழுக வேண்டும்.

**102. உத்தமனாய் இரு**

உத்தமனாக வாழவேண்டும்.

**103. ஊருடன் கூடி வாழ்**

ஊருடன் ஒற்றுமையாக இணைந்து வாழ்வாயாக.

**104. வெட்டெனப் பேசேல்**

வெடுக்கென்று பேசுதலாகாது.

**105. வேண்டி வினை செயேல்**

வேண்டுமென்றே தீய காரியம் செய்யாதே.

**106. வைகறைத் துயில் எழு**

விடியற்காலையில் தூக்கம் கலைந்து எழவேண்டும்.

**107. ஒன்னாரைத் தேறேல்**

பகைவர்களை நம்பாதே.

**108. ஓரம் சொல்லேல்**

ஒருதலைப்பட்சமாக குறை எதுவும் சொல்லலாகாது.

**109. ஒளவியம் பேசேல்**

பொறாமையோடு மற்றவர்களுடன் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை (வாக்குண்டாம்)

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்றருத லால்.**

**பதவுரை :–** நின்று – நிலைபெற்று; தளரா – சோர்வு அடையாமல், வளர் – வளர்கின்ற; தெங்கு – தென்னைமரம்; தாள்உண்ட – வேர் மூலம் குடித்த; நீரை – தண்ணீரை; தலையாலே – தலையிலே காய்க்கும் இளநீர் உருவில்; தருதலால் – கொடுப்பதால்; ஒருவர்க்கு – ஒருவருக்கு; நன்றி செய்தக்கால் – நல்லது செய்யும் போது; அந்நன்றி – அந்த நல்ல உதவிக்கு; என்று – எப்போது; தருங்கொல் – பிரதி உபகாரம் கிடைக்கும் என்று; எனவேண்டா – எண்ண வேண்டாம்.

**கருத்துரை :–** நல்லவனுக்கு உதவி செய்தால் அது வீணாகாது; நன்றியுடன் பிரதியுபகாரம் செய்வான்.

**நல்லார் ஒருவர்க்குச்செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத**
**ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்துக்கு நேர்.**

**பதவுரை :–** நல்லார் – நல்ல குணம் ள்ளவர்; ஒருவர்க்கு – ஒருவருக்கு; செய்த உபகாரம் – செய்த உதவி; கல்மேல் – கல்லிலே செதுக்கப்பட்ட; எழுத்துப் போல் – எழுத்தைப் போல; காணுமே – என்றும் நிலைத்திருக்கும்; அல்லாத – நல்ல குணமில்லாத; ஈரமிலா – இரக்கமற்ற; நெஞ்சத்தார்க்கு – உள்ளமுடையவருக்கு; ஈந்த – செய்த; உபகாரம் – நல்ல காரியம்; நீர் மேல் – நீரிலே; எழுத்துக்கு – எழுதப்பட்ட எழுத்துக்கு; நேர் – ஒப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துரை :-** நல்லவருக்குச் செய்த உதவி கல்லின்மேல் எழுத்துப் போல் அழியாது விளங்கும். தீயவருக்குச் செய்த உதவியினால் ஒரு பயனுமே இல்லை.

**உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்**
**பற்றலரைக் கண்டால் பணிவரோ? - கல்தூண்**
**பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்**
**தளர்ந்து வளையுமே தான்.**

**பதவுரை :-** கல் தூண் – கருங்கல் தூண்; பெரும்பாரம் – தாங்க முடியாத பளுவை; தாங்கின் – சுமந்தால்; பிளந்து இறுவது அல்லால் – முறிந்து போவதன்றி; தளர்ந்து வளையுமோ? குழைந்து வளையுமோ? வளையாது. உற்ற இடத்தில் – மானக்கேடு வரும் இடத்தில்; உயிர் வழங்கும் – உயிரை விடும்; தன்மையோர் – குணமுடையவர்; பற்றலரை – எதிரிகளை; கண்டால் பணிவரோ! – கண்டால் வணங்குவாரோ?

**கருத்துரை :-** மானமே பெரிது என்று எண்ணுபவர் ஆபத்து வரும்போது உயிரை விடுவர்; மானத்தை ஒருபோதும் இழக்கமாட்டார்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக் க**
**நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று.**

**பதவுரை :-** நல்லாரை – நல்லவர்களை; காண்பதுவும் – பார்ப்பதுவும்; நன்றே – நல்லதே; நல்லார் – நல்லவர்களது; நலமிக்க – நன்மை தரத்தக்க; சொல் – சொற்களை; கேட்பதுவும் நன்றே – நற்குணங்களை; உரைப்பதுவும் – எடுத்துச் சொல்வதுவும்; நன்றே – நல்லதே; அவரோடு – அத்தகையவருடன்; இணங்கி – தோழமையோடு; இருப்பதும் – சேர்ந்திருப்பதும்; நன்றே – நல்லதே.

**கருத்துரை :-** நல்ல குணம் உடையவர்களைக் காண்பதும் நல்லது. அவர்தம் குணங்களைப் பிறர்க்கு எடுத்தக் கூறுவதும் நல்லது. அவரோடு ஒன்றாகச் சேர்ந்திருப்பதும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீயாரைக் காண்பதுவும் தீதே திருஅற்ற**
**தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் தீது.**

**பதவுரை :-** தீயாரை – தீய குணங்கள் உள்ளவரை; காண்பதுவும் – பார்ப்பதுவும்; தீதே – தீமையே; தீயார் – தீயவர்களது; திருஅற்ற – பொருளற்ற; சொல் கேட்பதும் – சொற்களைக் கேட்பதும்; தீதே – தீயதே தரும்; தீயார் – தீயவரது; குணங்கள் – குணங்களை; உரைப்பதும் – எடுத்துப் பேசுவதும்; தீதே – கெடுதலே விளைவிக்கும்; அவரோடு – அவருடன்; இணங்கி – சேர்ந்து; இருத்தலும் தீதே – இருப்பதும் கெடுதியே உண்டு பண்ணும்.

**கருத்துரை :-** தீய குணங்கள் உள்ளவர்களைப் பார்க்கவே கூடாது; அதனால் தீமையே விளையும். பார்க்கவே கூடாது என்றால் அவர்களுடன் பேசலாமா? அவர் கூறும் மொழிகளைக் கேட்கலாமா? அவரது குணங்களைக் கூறலாமா? அவருடன் சிநேகம் செய்யலாமா? கூடாது; கூடாது அவற்றால் தீமையே விளையும்.

**நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லாருக்கும் பெய்யும் மழை.**

**பதவுரை :-** நெல்லுக்கு – நெற்பயிருக்கு; இறைத்த நீர் – இறைக்கப் பெற்ற தண்ணீர்; வாய்க்கால் வழியோடி – வாய்க்காலின் வழியாக ஓடிச்சென்று; ஆங்கு – ஆங்கேயுள்ள; புல்லுக்கும் – புல்லுக்கும்; பொசியும் – கசியும்; (அதுபோல) தொல் உலகில் – பழமையாகிய இந்த உலகில்; நல்லார் ஒருவர் – நல்லவர் ஒருவர்; உளரேல் – இருப்பாரானால்; அவர் பொருட்டு – அவர் காரணமாக; எல்லாருக்கும் – எல்லோருக்கும்; மழை – மழை; பெய்யும் – பெய்யும்.

**கருத்துரை :-** நல்லார் ஒருவர் இருந்தால் அவரைச் சூழ்ந்துள்ள பலருக்கும் நன்மையே விளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கான மயில்ஆடக் கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே**
**கல்லாதவன் கற்ற கவி.**

**பதவுரை :–** கல்லாதவன் – ஆழ்ந்த கல்வி அறிவு இல்லாதவன்; கற்ற கவி – பிறர் சொல்லக்கேட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கற்றுக் கொண்டு பிரசங்கம் செய்தால்; (எது போன்றது?) கானமயில் காட்டிலே உள்ள மயில்; ஆட – தனது இயற்கையான அழகிய தோகையை விரித்து ஆட; கண்டிருந்த – அதைப் பார்த்திருந்த வான் கோழி – வான்கோழி; தானும் அதுவாகப் பாவித்து – தானும் மயில் என்று எண்ணி; தானும் தன் பொல்லாச் சிறகை – அது அழகில்லாத தனது சிறகை; விரித்துத் தானும் ஆடினாற் போலும் – விரித்து ஆடியது போலாகும்.

**கருத்துரை :–** கல்லாதவன் கற்றவனைப் போல நடிக்கலாம். நடித்தாலும் அது அழகு தராது. கல்வியின்மை வெளிப்பட்டுவிடும்.

**அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்**
**வாடி யிருக்குமாம் கொக்கு.**

**பதவுரை :–** கொக்கு – கொக்கானது; மடைத்தலையில் – நீர் பாயும் மடையிலே; வாடி இருக்கும் – அடங்கித் துவண்டு இருக்கும் (எது வரையில்); ஓடு மீன் ஓட – ஓடிக் கொண்டிருக்கிற சிறு மீன்களை எல்லாம் ஓடவிட்டு; உறுமீன் – தன் கருத்துக்கேற்ற பெரிய மீன்; வரும் அளவும் – வரும் வரையில்; வாடி இருக்குமாம் – வாட்டத்துடன் இருக்கும். (அதுபோல) அடக்கம் உடையார் – அடங்கி இருப்பவரை; அறிவிலர் – அறிவில்லாதவர்; என்று எண்ணி – என்று நினைத்து; கடக்க – அலட்சியம் செய்து போக; கருதவும் வேண்டா – எண்ணவும் வேண்டாம்.

**கருத்துரை :–** ஒருவர் அடக்கமாக இருப்பது கண்டு அவரை வென்று அலட்சியம் செய்துவிட நினைப்பது அறியாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்தாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்.**

**பதவுரை :-** கயத்தில் – குளத்தில் உள்ள; நல்ல தாமரை – நல்ல தாமரை மலரை; நல்அன்னம் – நல்ல அன்னப்பறவை; சேர்ந்தாற்போல் – அடைந்தது போல்; கற்றாரை – படித்தவர்களை; கற்றாரே – படித்தவர்களே; காமுறுவர் – விரும்புவர்; முதுகாட்டில் – சுடுகாட்டில் உள்ள; பிணம் – பிணத்தை; காக்கை உகக்கும் – காக்கை விரும்பம்; கற்பிலா மூர்க்கரை – எழுத்து வாசனை அறியாத மூர்க்கரை; மூர்க்கம் – மூர்க்கரே; முகப்பர் – விரும்புவர்.

**கருத்துரை :-** நல்ல தாமரை மலர்ந்த பொய்கையைத் தேடிச் செல்லும் அன்னப்பறவை; அதுபோல, படித்த அறிஞர்களைத் தேடிச் செல்வர்.

**நஞ்சுஉடமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்**
**அஞ்சாப் புறம்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத் தவர்.**

**பதவுரை :-** நாகம் – நாகபாம்பு; தான் நஞ்சு உடமை அறிந்து – தன்னிடத்திலே நஞ்சு இருப்பதை அறிந்து; கரந்து உறையும் – புற்றில் ஒளிந்து வாழும்; நீர்ப்பாம்பு – நஞ்சில்லாததாகிய நீர்ப்பாம்போ; அஞ்சாப் புறங்கிடக்கும் – அஞ்சாமல் எங்கும் திரியும்; நெஞ்சில் கரவு உடையார் – வஞ்சனை மிக்க உள்ளத்தினர்; தம்மைக் கரப்பர் – மறைத்துப் பேசுவர்; கரவிலா நெஞ்சத்தினர் – வஞ்சனையில்லாத நெஞ்சினரோ; கரவார் – ஒளித்துப் பேசமாட்டார்.

**கருத்துரை :-** வஞ்சனையற்ற உள்ளமுடையார் எதையும் வெளிப்படையாகப் பேசுவர். வஞ்சகரோ மறைத்து மழுப்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னனும் மாசுஅறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு.**

**பதவுரை :-** மன்னனும் – அரசனையும்; மாசுஅறக் கற்றோனும் – நன்றாக அறிஞந்த அறிஞனையும்; சீர்தூக்கின் – ஆராய்ந்தால்; மன்னனில் – அரசனைவிட; கற்றோன் – அறிஞன்; சிறப்புடையன் – சிறப்புடையவன் ஆவான்; மன்னற்கு – அரசனுக்கோ; தன் தேசம் அல்லால் தன்னுடைய தேசத்தில் அல்லாது; சிறப்பில்லை – சிறப்பு இல்லை; கற்றோர்க்கு – அறிஞனுக்கு; சென்ற இடம் எல்லாம் சிறப்பு – எங்கு சென்றாலும் சிறப்பே.

**கருத்துரை :-** மன்னனுக்குத் தன் தேசத்தில் பெருமை. கற்றோர்க்குச் சென்ற இடமெங்கும் பெருமை. எனவே அரசனை விடக் கல்விமானே பெரியவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியாரின்
# புதிய ஆத்தி சூடி

1. அச்சந் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்த லிகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதி செய்
6. ஊண் மிக விரும்பு
7. எண்ணுவ துயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்த லொழி
12. ஔடதங் குறை
13. கற்ற தொழுகு
14. கால மழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க் கஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்து நில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலுந் துணிந்து நில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை யெதிர்த்து நில்
23. கோல்கைக் கொண்டு வாழ்
24. கௌவியதை விடேல்
25. சரித்திரத் தேர்ச்சி கொள்
26. சாவதற் கஞ்சேல்
27. சிதையா நெஞ்சுகொள்
28. சீறுவோர்ச் சீறு
29. சுமையினுக் கிளைத்திடேல்
30. சூரரைப் போற்று
31. செய்வது துணிந்து செய்
32. சேர்க்கை அழியேல்
33. சைகையிற் பொருளுணர்
34. சொல்வது தெளிந்து சொல்
35. சோதிடந் தனையிகழ்
36. சௌரியந் தவறேல்
37. ஞமலி(நாய்)போல் வாழேல்
38. ஞாயிறு போற்று
39. ஞிமிறு(எறும்பு போல) என இன்புறு
40. ஞெகிழ்வ தருளின்
41. ஞேயங் (அன்பு)காத்தல் செய்
42. தன்மை யிழவேல்
43. தாழ்ந்து நடவேல்
44. திருவினை வென்று வாழ்
45. தீயோர்க் கஞ்சேல்
46. துன்ப மறந்திடு
47. தூற்றுத லொழி
48. தெய்வம் நீ யென்றுணர்
49. தேசத்தைக் காத்தல் செய்
50. தையலை உயர்வு செய்
51. தொன்மைக் கஞ்சேல்
52. தோல்வியிற் கலங்கேல்
53. தவத்தினை நிதம் புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. நன்று கருது
55. நாளெலாம் வினை செய்
56. நினைப்பது முடியும்
57. நீதி நூல் பயில்
58. நுனியளவு செல்
59. நூலினைப் பகுத்துணர்
60. நெற்றி சுருக்கிடேல்
61. நேர்படப் பேசு
62. நையப் புடை
63. நொந்தது சாகும்
64. நோற்பது கைவிடேல்
65. பணத்தினைப் பெருக்கு
66. பாட்டினில் அன்பு செய்
67. பிணத்தினைப் போற்றேல்
68. பீழைக் கிடங்கொடேல்
69. புதியன விரும்பு
70. பூமி யிழந்திடேல்
71. பெரிதினும் பெரிதுகேள்
72. பேய்களுக் கஞ்சேல்
73. பொய்மை யிகழ்
74. போர்த்தொழில் பழகு
75. மிடிமையில் (வறுமை) அழிந்திடேல்
76. மீளுமா றுணர்ந்து கொள்
77. முனையிலே முகத்துநில்
78. மூப்பினுக் கிடங்கொடேல்
79. மெல்லத் தெரிந்து சொல்
80. மேழி (உழவு) போற்று
81. பொய்ம்புறத் தவஞ் செய்
82. மோனம் போற்று
83. மௌட்டியந் தனைக்கொல்
84. யவனர்போல் முயற்சி கொள்
85. யாரையும் மதித்து வாழ்
86. யௌவனங் (அழகு) காத்தல் செய்
87. ரஸத்திலே (இலக்கியத்தில்) தேர்ச்சி கொள்
88. ராஜஸம் (அரசியல்) பயில்
89. ரீதி (ஒழுங்கு) தவறேல்
90. ருசிபல வென்றுணர்
91. ரூபஞ் (உருவம்) செம்மை செய்
92. ரேகையிற் கனிகொள்
93. ரோதனந் (தொல்லை) தவிர்
94. ரௌத்திரம் (கோபம்) பழகு
95. லவம் பல வெள்ளமாம்
96. லாகவம் (எளிமை) பயிற்சி செய்
97. லீலை யிவ்வுலகு
98. (உ)லுத்தரை யிகழ்
99. (உ) லோக நூல் கற்றுணர்
100. லௌகிகம் ஆற்று
101. வருவதை மகிழ்ந்து உண்
102. வானநூற் பயிற்சி கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் வாய்மொழிகள்

## அன்புடைமை

1. **அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
   **புன்கண்நீர் பூசல் தரும்.**
   அன்புடையாரின் துன்பத்தைக் கண்டதும் அவர் தம் கண்களிலிருந்து நீர் சிந்தி அன்பை வெளிப்படுத்திவிடுவர். எனவே அன்பிற்கு அதைப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாள்பாழ் இல்லை.

2. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
   **என்பும் உரியர் பிறர்க்கு.**
   அன்பில்லாதவர்கள் அனைத்துப் பொருளையும் தாமே பிறர்க்கு தராமல் அனுபவிப்பார்கள். அன்புடையவர்கள் தம் பொருளையும் உடலையும் பிறர்க்குத் தந்துதவுவர்.

3. **அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
   **என்போடு இயைந்த தொடர்பு.**
   அன்புடன் பொருந்தி வாழ்வதே அரிய உயிர்க்கு, உடலுடன் பொருந்திய தொடர்பு ஆகும்.

4. **அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்**
   **நண்பென்னும் நாடாச் சிறப்பு.**
   பிறரிடத்தில் அன்பு செலுத்தி விருப்புடனிருக்கும் தன்மை, நட்பு என்னும் அளவு கடந்த சிறப்பைத் தரும்.

5. **அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
   **இன்புற்றார் எய்துஞ் சிறப்பு**
   இவ்வுலகில் அன்புடனிருந்து இல்வாழ்க்கையில் இன்புற்றவர், மறு பிறவியில் அடையும் பேரின்பம் அவர் அன்புடையவராக ஒழுகிய ஒழுக்கத்தின் பயனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

அறம் செய்வதற்கே அன்பு துணையாக உள்ளது என்று அறிவுடையோர் கூறுவர். அன்பு தீய எண்ணங்களையும் தீமைகளையும் ஒழிப்பதற்கும் அதுவே துணையாகும்.

7. **என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**

எலும்பற்ற உயிர்களை வெயில் காய்ந்து வருத்துவது போல், அன்பற்றவரை அறக்கடவுள் வருத்தும்.

8. **அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று**

மனத்தில் அன்பில்லாதவர் இல்லறத்தில் நன்கு வாழ்தல் என்பது பெரும் பாலைவனத்தில் உலர்ந்த மரம் துளிர்ப்பது போன்றதாகும்.

9. **புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு**

உடம்பின் உள்ளுறுப்பாகிய உள்ளத்தில் அன்பில்லாதவர்க்கு வெளியுறுப்புக்களால் பயன் ஏதுமில்லை.

10. **அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

அன்புடன் பொருந்திய உடலின் உயிரே நிலை பெறும். அன்பில்லாதவர் உடல் வெறும் எலும்பும், தோலும் போர்த்திய கூடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுடைமை

1. **அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
   **பூரியார் கண்ணும் உள.**

   உயிர்களிடம் அருள் கொண்டு வாழ்வதே சிறந்த செல்வமாகும். பொருளால் வரும் செல்வம் அருளில்லாவிடில் இழிவாகக் கருதப்படும்.

2. **நல்ஆற்றான் நாடி அருளாள்க பல்ஆற்றால்**
   **தேரினும் அஃதே துணை.**

   நல்வழியை ஆராய்ந்து அருள் செய்ய வேண்டும். ஏனெனில், பலவழிகளில் அருளே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

3. **அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
   **இன்னா உலகம் புகல்.**

   உயிர்களிடம் கருணை கொண்டு அருள் செய்பவர் இருள் சேர்ந்த நரகத்திற்கு செல்லமாட்டார்.

4. **மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப**
   **தன்னுயிர் அஞ்சும் வினை.**

   உயிர்களிடம் கருணை கொண்டு அன்பு செலுத்துபவர், தன் உயிர் அஞ்சுமளவிற்கு பாவச் செயல்களைச் செய்யார்.

5. **அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளி வழங்கும்**
   **மல்லல்மா ஞாலம் கரி.**

   அருள் உடையவர்களுக்கு என்றும் துன்பம் இல்லை. காற்று உலவுகின்ற வளமுடைய இவ்வுலகில் வாழ்வாரே இதற்குச் சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி**
**அல்லவை செய்தொழுகு வார்.**

அருளற்றவராய் கொடுமைகளைச் செய்பவர், பொருளற்றவராய், வாழ்வும் இழந்தவராகக் காணப்படுவர்.

7. **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

பொருளில்லாதவருக்கு இவ்வுலக வாழ்வில் இன்பம் இல்லாதது போல், உயிர்களிடத்தில் அன்பில்லாதவருக்கு வானுலகமில்லை என்றாகும்.

8. **பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்**
**அற்றார் மற்றுஆதல் அரிது.**

பொருளில்லாதவர் ஒரு நாள் பொருளுடைய ஆவார். ஆனால் அருளில்லாதாவர் ஒரு நாளும் சிறந்து விளங்கமாட்டார்.

9. **தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

அருளற்றவன் செய்யும் அறம் என்பது அறிவற்றவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டது போலாகும்.

10. **வலியார்முன் தன்னை நினைக்காதான் தன்னின்**
**மெலியார் மேல் செல்லும் இடத்து.**

தன்னைவிட எளியவனை தான் வருத்த முற்படும் பொழுது, தன்னைவிட வலியவர் முன்தான் அஞ்சும் நிலையை எண்ணிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமுடைமை

1. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**
ஒழுக்கமானது பெரும் சிறப்பை அளிப்பதால், அது உயிரைவிடச் சிறந்ததாகக் காக்கப்பட வேண்டும்.

2. **பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.**
துன்பத்திலும் ஒழுக்கம் காக்கப்பட வேண்டும். ஏனெனில் எவ்வளவு ஆராய்ந்து நோக்கினாலும் ஒழுக்கமே சிறந்த துணையாக நிற்கின்றது.

3. **ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**
ஒழுக்கமுடையமை குடிச்சிறப்பாகும். ஒழுக்கத்தில் தவறினால் அது தாழ்ந்த குலத்தவனாய் ஆக்கிவிடும்.

4. **மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**
கற்பவன் கற்றதை மறந்தாலும், அவற்றைப் பின்னர் கற்றுக் கொள்ள முடியும். ஒழுக்கத்தில் குறைவடைந்தால் அவனது குடியின் சிறப்பு அழிந்துவிடும்.

5. **அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்க மிலான்கண் உயர்வு.**
பொறாமை உள்ளவனிடம் செல்வம் நில்லாது நீங்கிவிடும். அவ்வாறே ஒழுக்கமற்றவனிடம் உயர்வு நீங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக் கறிந்து.**

அறிவுடையோர், சிறிதும் ஒழுக்கம் தவறாமல், செய்யும் கடமை எவ்வளவு கடினமாக இருப்பினும் செவ்வனே செய்து முடிப்பர். தவறினால் துன்பம் வரும் என அறிந்து.

7. **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி.**

ஒழுக்கமுடையவர் மேன்மை அடைவார்கள். அதில் தவறுபவர் அடையக்கூடாத பெரும் வழி அடைவர்.

8. **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.**

நல்லொழுக்கம் என்றும் நல்லின்பம் தரும். தீய ஒழுக்கம் எப்பிறவியிலும் துன்பத்தைக் கொடுக்கும்.

9. **ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயாற் சொலல்.**

ஒழுக்கமுடையவர் தீய வார்த்தைகளைத் தவறியும் தம் வாயால் கூறுதல் இயலாது.

10. **உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

உலகத்தோர் கருத்துக்கு ஒப்ப வாழும் முறையறியாதவர்கள், கல்வி பல கற்றும் அறிவற்றோர் எனப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறையுடைமை

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல் தலை.**

நிலம், தன்னைத் தோண்டுவாரையும் சுமந்து நிற்கும். அதுபோல தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் சிறப்பு.

2. **பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

ஒருவன் செய்யும் தீமையை பொறுத்துக் கொள்ள வேண்டும். அதனை மறந்து விடுதல் அதனினும் பெரும் சிறப்பு.

3. **இன்மையுள் இன்மை விருந்து ஒரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

வறுமையிலும் வறுமை விருந்தினரை உபசரிக்காதிருத்தல். வீரத்திலும் வீரம் என்பது பிறர் செய்யும் தவறினைப் பொறுப்பது.

4. **நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி ஒழுகப்படும்.**

ஒருவன் பொறுமையைப் பாதுகாத்து நடக்கவிரும்பினால் அவன் நற்குணங்களில் நீங்காதிருக்க வேண்டும்.

5. **ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பார்**
**பொறுத்தாரைப் பொன்றோப் பொதிந்து.**

பிறர் செய்த தீமையைப் பொறுக்காமல் தண்டிப்பவரை எவரும் மதியார். பொறுத்தவரை பொன்போன்று மதிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்.**

தவறு செய்தாரை தண்டித்தவர்க்கு அத்தருணம் மகிழ்ச்சியே; ஆனால் பொறுத்தார்க்கு உலகம் உள்ளவரை புகழ் உண்டு.

7. **திறனல்ல தற்பியர் செய்யினும் நோநொந்து**
**அறன் அல்ல செய்யாமை நன்று.**

பிறர் முறையற்ற தீமை செய்தாலும், அவருக்கு அறமற்ற துன்பத்தைச் செய்யாதிருத்தல் சிறந்தது.

8. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்**
**தகுதியான் வென்றுவிடல்.**

ஆணவத்தினால் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்து பெருந்தன்மையால் வென்றுவிடல் வேண்டும்.

9. **துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோக்கிற் பவர்.**

தீயவர் சொல்லும் கொடும் சொற்களைப் பொறுப்பவர் துறவிகளைவிட தூயவராவார்.

10. **உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுப்பவர், உண்ணாமல் தவம் செய்யும் துறவியைக் காட்டிலும் உயர்ந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கமுடைமை

1. **அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**
அடக்க குணம் ஒருவரை தேவரிடத்தே அழைத்துச் செல்லும். அடங்காமை நரகத்தில் தள்ளிவிடும்.

2. **காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின் ஊங் கில்லை உயிர்க்கு.**
அடக்கம் என்ற குணத்தைச் சிறந்த பொருளாகக் காக்க வேண்டும். அவ்வடக்கத்தைவிட சிறந்த செல்வம் உயிர்க்கில்லை.

3. **செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்.**
அறிய வேண்டியவற்றை அறிந்து அடங்கி நடந்தால், அவ்வடக்கம் பிறரால் போற்றப்பட்டு மதிப்புத் தரும்.

4. **நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**
நல்லறத்தில் தவறாது முறையாக அடங்கி வாழ்பவன் பெருமை மலையைவிட பெரிதாகக் கருதப்படும்.

5. **எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து**
பணிவுடைமை எல்லோர்க்கும் வேண்டும், அது செல்வர்க்கு இருப்பது மற்றொரு சிறப்புடைய செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடங்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

ஆமை, தன் உறுப்புக்களை ஓட்டினுள் அடக்கி வாழ்தல் போல், ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வது ஏழு பிறப்பிலும் தீமையின்றி காக்கும்.

7. **யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு.**

எவற்றை அடக்காவிட்டாலும் நாவை அடக்க வேண்டும். இல்லையேல் தவறான சொற்களைக் கூறி அவமானப்பட வேண்டும்.

8. **ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகாது ஆகி விடும்.**

தீய சொற்களினால் விளையும் தீமையானது, ஒருவனிடமிருக்கும் அனைத்து நலன்களையும் கெடுதலாக்கிவிடும்.

9. **தீயினாற் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

தீச்சுட்ட புண்ணினால் உடலில் ஏற்படும் வடு மனதில் ஆறும். ஆனால் தீய சொற்களினால் ஏற்படும் புண் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

10. **கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

மனதில் சினம் ஏற்படாமல் காத்து அடக்கத்துடனிருப்பவனிடம் அறக்கடவுள் சென்றடையும் சமயத்தை எதிர்நோக்கியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடம்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

2. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

3. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்
வனம்தேடும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
மற்றுநிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

5. வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
வாழ்வாரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

6. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்தபுக ழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேடவேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே.

8. சேராத இடம் தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

9. மண்நின்று மண்ஓரம் சொல்ல வேண்டாம்
மனம்சலித்துச் சிலுக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண்அழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறம்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டும்
மண் அளந்தான் தங்கைஉமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே.

11. கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

12. ஆதரித்துப் பலவகையால் பொருளும் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடி வைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந்தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடும்ப விளக்கு

## அமரர் கந்தையா கனகரத்தினம்

அவர்கள் 24-03-2015இல் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து உடன் வந்து எமது துக்கத்தில் கலந்து கொண்ட அயலவர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் எமது துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அந்தியோட்டிக் கிரியைகளிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்ட அன்பர்களுக்கும், இம்மலரினை உரிய வேளையில் அச்சில் பதித்து உதவிய "பிறிண்ட் மாஸ்டர்" நிறுவனத்தினருக்கும், கிரியைகளை உரிய முறையில் நடத்திய குருக்கள்மாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

**கொக்குவில்.**
**23-04-2015**


**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

( அமரர் கந்தையா கனகரத்தினம் )







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவான் சத்யசாயி பாபாவின் அருள் மொழிகள்

- இறைவன் ஒருவரே! இலக்கு ஒன்றே! இக் கூற்றில் உறுதியான நம்பிக்கையினை வளர்த்துக் கொண்டால் நீங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ளலாம்.
- இறைவனது சிறப்பின் மீது சிந்தனையை வைத்து மற்றவர்களையும் இறைவனது குழந்தைகளாகப் பாவித்துச் சேவையை வழங்குவதே பக்தியாகிறது.
- அன்பே கடவுள் ஓர் எறும்புகூட அன்பில்லாது வாழ்ந்திட முடியாது. அது நகர்ந்து செல்லும் போதே இதர எறும்புகளுடன் அன்பு பாராட்டிக் கொள்ளும்.
- விடா முயற்சியின் காரணமாக ஓர் எறும்புகூட பல மைல் தூரத்தைக் கடந்துவிட முடியும். ஆனால் முயற்சி இல்லை எனின் கழுகு கூட ஓர் இம்மி அளவு கூட நகர்ந்து விட முடியாது.
- "ஆன்மீகப் பயணமானது "நான்" என்பதிலிருந்து நாம் என்பதற்கான பாதை. அதன் முடிவு பலவற்றுடனானதுதான் அந்த ஒன்று". என்னும் உணர்வு
- தானம், யாகம், யக்ஞம், சனாதன தருமம் மற்றும் அதன் உன்னத குணநலன்கள் எவையாயினும் ஒரு தாயின் அன்புக்கு ஈடாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINT MASTER, KOKUVIL - T.P. 021 2053322